**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 Special Issue December 2024 eISSN: **2456-5148**

களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# Social Thoughts in Devotional Literature

The Arulalars and the Tamil Mantra of Devotion: A Path to Social Development and Spiritual Salvation

**Dr. R. Tamilselvi, M.A., M.Phil, Ph.D.**
Assistant Professor, Valliammal Women's College, Annanagar (East), Chennai -102
Email: tamilarul@yahoo.co.in

**Abstract:**

The rich tradition of Tamil Bhakti literature is profoundly rooted in the principles of devotion and social development. At the forefront of this movement were the Arulalars, who guided the people towards a life imbued with the essence of the Tamil mantra "Yanperta Inpam Peruka Evvaikam" from the Thirumanthiram (85). This paper explores the significance of the Arulalars' teachings, particularly the phrases "Arkum Idumin Avarivar Ennanmin" and "Anbe Shivam - Makkatpaniye Mahesan Pani," emphasizing the inseparable link between spirituality, social welfare, and communal harmony. The transformative power of divine revelation, encapsulated in classical Tamil literature, serves as a guiding light in the quest for spiritual salvation while fostering an inclusive society. The Tamil spiritual landscape is characterized by a rich interweaving of devotion, social context, and intellectual heritage. Central to this landscape is the movement led by the Arulalars, esteemed religious figures who dedicated their lives to imparting wisdom and guidance for spiritual and communal wellbeing. Their teachings resonate deeply with the Tamil mantra "Yanperta Inpam Peruka Evvaikam," which emphasizes the importance of personal and collective elevation through devotion and righteousness. By interpreting the divine through a lens of social development, the Arulalars sought to inspire individuals to cultivate both their spiritual and worldly lives.

***Keywords:*** Tamil Bhakti literature, Social Thoughts

## பக்தி இலக்கியங்களில் சமூகச் சிந்தனைகள்

**முனைவர். ர. தமிழ்ச்செல்வி,** எம்.ஏ, எம். ஃபில், பி.எச்.டி

உதவிப் பேராசிரியர், வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை -102 Email: tamilarul@yahoo.co.in

***<u>முன்னுரை:</u>***

*அருளாளர்கள் பக்திவழிப்பட்ட சமுதாயம் அமைய வேண்டி "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" (திருமந்திரம்-85) என்ற தமிழ் மந்திரப்படி மக்கள் வாழ வழிகாட்டினர். "ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்" என்றும், "அன்பே சிவம்- மக்கட்பணியே மகேசன் பணி" என்றும் திருமூலர் கூறும் தொடர்கள் பக்தி இயக்கத்தின் உயிரே சமூக*

மேம்பாடு என்பதைப் புலப்படுத்தும். மக்களை மறந்த பக்தி மண்ணில் வாழ்ந்ததில்லை, நமது சமய அருளாளர்கள் தாம் கண்ட ஞானச் செல்வங்களை யெல்லாம் வாரி வழங்க முற்பட்டனர். மக்கள் அனைவரையும் அழைத்து இறையருட் செல்வம் பெற்று வாழ்வினைப் பொருள் உள்ளதாக ஆக்கும் நுட்பத்தையும் அதனால் ஆன்ம ஈடேற்றம் பெறும் திட்டத்தையும் புலப்படுத்தினர். உலகெங்கும் காணக்கிடைக்காத அருள் நூல்கள் நம் நாட்டில் பெருகியதன் காரணமே நம் மண்ணைப் புண்ணிய பூமியாக ஞான பூமியாக மாற்ற வேண்டும் என்ற இறையருள் வெளிப்பாட்டின் நோக்கமேயாகும். அதனால் செம்மொழித் தமிழை ஞானமொழி என பெருமையோடு கூறலாம். தன் உயிர் தான் அறப் பெற்றவுடன் மன்னுயிர் யாவும் போற்றும் மாபெரும் தவவலிமை பெறும் தந்திரத்தைக் கண்ட நம் சமயப் பெரியோர்கள் மக்கள் யாவரும் தவம் பெருக்கும் சீலர்களாய்த் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பேரருள் மிக்க பெரியோர் ஆதற்குரிய வழிமுறைகளைக் காட்டிச் சென்றனர். அவர்கள் காட்டிய அருள் நெறியே பக்தி இலக்கிய நெறியாகும்.

**பக்தியும் சமூகமும் :**

“கொண்டது என் தன்னைத் தந்தது உன்தன்னை” என்று மணிவாசகப் பெருமான் அகத்தை ஆலயமாக்கி இறைவனை அங்கே எழுந்தருளச் செய்த பாங்கினைப் பாடுவார். அவரே “சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கித் தம்மை ஆண்டுகொண்ட அத்தன்” அருளையும் பாடுவார். எனவே வழிபாடு புறச் சடங்காக இல்லாமல் அகவழிபாடாக ஆன்ம லாபம் பெறத்தக்க வகையில் அமைய வேண்டும் என்பதே பக்தியின் நிறைவு நிலையாகும். அவனருளால் அவன் தாள் வணங்கி, உள்முகமாக உள்கட (கட + உள் = கடவுள்) நோக்கினால் கண்ணாடியில் காண்பது போன்று சிவனருட் காட்சியை அகத்தே காணலாம். அதற்கு அகப்புற ஒழுக்கங்கள் போற்றப்பட வேண்டும். உள்ளம் கோயிலாக சீவன் சிவமாக மாற்றத்தக்க பக்தி வேண்டும். எனவே தனக்கென வேண்டாத சால்பு பக்தியின் அடித்தளம். பிறர்க்கென வேண்டும் ஒப்புரவு அதன் முடிமணி. தம் உழைப்பால் உண்ணும் உணர்வும், எத்தொழிலையும் மதித்துக் கடமையாற்றும் பண்பும், பக்தியின் நிறை நிலையாகும். இன்று புறச்சடங்கும், பரிகாரமும் மட்டுமே பக்தி என்பது போல மாயத் தோற்றம் உருவாகப்பட்டு மக்களை மயக்கி அழிக்கின்றது.

பக்தி வேறு சமுதாயம் வேறு எனப் பிரிக்க முடியாதபடி அன்பின் வழிப்பட்ட சமூக உறவுகள் அருளின் வழிப்படும் போது பக்தி நலம் பெருக்கக் காண்கின்றோம். ஆதலால் பக்தி இலக்கியங்களின் உயிரோட்டமே சமூகச் சிந்தனைதான் என்பதை அறுதியிடமுடியும்.

**கல்வியும் மெய்ஞ்ஞானமும்:**

திருவள்ளுவர் இறைமாட்சியின் பின் கல்வியை வைத்தமையை எண்ணல் வேண்டும். இறைமாட்சி பெறக் கற்றோர் வேண்டும். சைவப்புண்ணியக் கண்ணாகிய சம்பந்தப் பெருமான் ”கற்றல் கேட்டல் உடையார் பெரியார்” என்பர். மணிவாசகப் பெருமான் “கற்பனவும் இனி அமையும்” என்பர். எனவே கற்றல், கேட்டல், சிந்தித்தல், அய்யந்தெளிதல், தன்மயமாதல், தூயமெய்யறிவு பெறுதல் இவையே உண்மை பக்தியின் வெற்றிக்கு அடித்தளமாகும். ஒட்டுமொத்தச் சமூகத்தின் உயர்வும் வளர்ச்சியும் கல்வியால் உருவாகும். அதுவே ஆக்க அறிவின் வெளிப்பாடாகும். அதுவும் மெய்ஞ்ஞானச் கல்வியாக – ஆன்மிகக் கல்வியாக – சாகக்கலை கல்வியாக அமைத்தால் இம்மண்ணிலே விண்ணுல வாழ்வு வாழ்ந்திடலாம். அத்தகைய சமூகத்தை உருவாக்கிட முடியும் என்பது சான்றோர் கண்ட பேர் உண்மை. எனவே அஞ்ஞான இருளகற்றி, அருள் விளக்கேற்றி, அறவாழ்வு வாழ்ந்து,



KALANJIYAM

அகவிருள் போக்கி, ஆன்ம நேய ஒருமைப்பாட்டை வளர்த்து, எவ்வுயிரும் தம் உயிர் போல் போற்றும் நல்லறக்கல்வியே சமூகத்திற்கு வேண்டும் என்பதை அருளாளர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர்.

**ஏற்றத்தாழ்வற்ற சமூக ஒப்புரவு போற்றல்:**

இறைவன் முன் அனைத்துயிரும் சமம் என்பதே நமது தமிழ்ச்சமயத்தின் கோட்பாடாகும். இதனை கண்ணப்பர், திருநாளைப் போவார் வரலாற்றால் அறியலாம். பெரியபுராணம் பாடிய சேக்கிழரர் பெருமான் பக்திச் சுவை ததும்பும் காப்பியத்தில் தாழ்த்தப்பட்ட கண்ணப்பரையும் திண்டத்தகாத திருநாளைப் போவாரையும் 'அய்யர்' என்று போற்றியுள்ளர். இவ்வாறு கிழிலிருந்தும் கிழ்அல்லர் என்பதே நமது பக்தி நெறி காட்டும் உண்மை. பாணர் குலத்து உதித்து சம்மந்தப் பெருமானுடன் திருக்கோயில் தோறும் சென்று அவர்தம் பாடலுக்கு யாழ் இசைத்த திருநிலகண்டயாழ்ப்பாணரும் அவர்தம் துணைவியார்க்கும் தமது வேள்விச்சாலையுள் பள்ளி கொள்ள அழைத்த செய்தி பக்திக்கு ஏற்றத்தாழ்வில்லை என்பதைக் காட்டப் போதுமானதாகும். இதனை சம்மந்தர் "வாசிதீரவே அடியார்க்கு அருள் செய்து வளர்ந்தான் வலிதாயம்" என்று கூறுகின்ற பாங்கால் அறியலாம். "சாதிகுலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டு தடுமாறும் ஆதமிலி நாயேன்" என்று சாதிகுலம் பேசும் குறைமதியாளர்களை மாணிக்கவாசகர் கண்டிப்பார். பல்லவ மாமன்னன் கட்டிய பரந்து விரிந்த கற்கோயிலைக் காட்டிலும் பூசலார் கட்டிய மனக்கோயிலில் எழுந்தருளிய தன்மையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். "சாதியும், மதமும், சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி" என்பார் வள்ளலார். பக்திக்கு முன் அரசன், பணியாள், உடையவர், இல்லாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் ஏதும் இல்லை. இறையருள் ததும்பும் அருள் உள்ளம் ஒன்றே வேண்டும் என்பதே அருளாளர்கள் கண்ட பேருண்மையாகும்.

**பெண்மையின் பெருமை பேணும் பாங்கு:**

சமுதாயத்தில் சரிபாதியாக உள்ள பெண்களே சமூக இயக்கத்தின் ஆணிவேராவர். பெண்களுக்குரிய மதிப்பும் மாண்பும் போற்றாத சமுதாயம் அடிமைபட்டொழியும். இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையும், மங்கையர்கரசியாரும், திலகவதியாரும், ஆண்டாளும் உலகில் பெற்ற பெருமையை யாவரும் அறிவர். பெண்ணின் பெருமை பக்தி இலக்கியங்களால் அறியப்பட்டது. பெண்களின் மாண்பே மண்ணின் மாண்பு, அடுத்த தலைமுறையின் மாண்பு என்பதைக் காட்ட வந்த சேக்கிழார் பெருந்தகை,

> "மங்கையர் வதன சீத மதியிரு மருங்கும் ஓடிச்
> செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு"

என்று பாடும் போது காட்டுகின்றார். செம்மைப்படுத்தும் உயர் பேரொழுக்கம் கொண்டவர்களாக மகளிர் விளங்கினர் என்பதை சுந்தரரிடம் காதல் கொண்ட பரவையாரின் திருவாக்கால் அறியலாம். தன் மனம் திரியக் காரணம் "இறையருளே" என்று நினைக்கும் பரவையாரின் தெய்வ உள்ளத்தினை சேக்கிழார் காட்டுகின்றார். இவ்வாறு காதலையும் பக்தியாகக் காணும் பேராற்றல் மிக்கவர்களாக மங்கையர்குலம் வாழ வழிகாட்டுவது நமது பக்தி இலக்கியங்களின் சிறப்பாகும்.

*<u>எளிமை இனிமை நிறைவு:</u> "ஆசைபடப்பட ஆய்வருந்துன்பங்கள்" என்பதை உணராத மனிதன் நுகர்வு விருப்பில் ஆசைவாய்ப்பட்டு உண்மை உழைப்பில்லாமல் அலைந்து வீண் போகின்றான். மனிதன் முக்குணங்களும் முன்வினைகளும் மும்மலங்களும் கொண்டவன். இவை இறைவனை அடைய தடையாக இருப்பவை. எனவே நமது பக்தி இலக்கியங்களில் இறைவன் அடியாரது குடில்கள் தோறும் எழுந்தருள்வான். "எந்நாளும் இன்பமன்றி துன்பமே இல்லை" என்பது அடியார்க்கு அவன்தரும் மந்திரம். குலசேகர ஆழ்வார் அடியாரும் வானவரும் அரம்பையரும் இயங்கும் திருக்கோயிலில் படியாய்க் கிடந்து பவளவாய் காண அருள்க என்று வேண்டுகின்றார். இராமாயணத்தில் நாடு திரும்பிய இராமன் அனைவருக்கும் வேண்டுவன வழங்கி அனுமானைப் பார்த்து உனது அடிமைத் தொழிலுக்கு என்னையே தருவேன் "என்னை அனுமா நீ வந்து தழுவிக்கொள்" என உரைத்ததையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இறைவன் வேண்டுவதெல்லாம் தூய உள்ளம், உண்மை உழைப்பு, தேர்ந்த ஞானம் மட்டுமே. அங்கே அவன் ஞானசுடராக வீற்றியிருப்பான்.*
*<u>சீலத்துடன் கூடிய செய்தொழில் மேன்மை:</u> இறைவனையடைய வேண்டுவது அகப்புற ஒழுக்கங்கள்.*

*"தன்னை அறிய தனக்கொரு கேடில்லை*
*தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்"*

*என மனித உலகம் காம, குரோத மோக, மத மாச்சரியங்களாலும், கொலை, புலை, கள், களவு போன்ற மூடத்தாலும் இடர்வாய்ப்பட்டு இழிந்து கிடக்கின்றது. பேதையும், போதையும் ஆட்சி நடத்துகின்றன. சமூகம் அழிவின் விழிம்பில் நிற்கிறது . எனவே அருளாளர்கள்,*

*"சீலம் மிகு சித்தத்தவர்கள் சிந்தித் தெழும் எந்தை" (தேவாரம்)*

*என்று கூறுவதால், சீலம் மிகச்சித்தத்துடன் சிந்திப்பவர் நெஞ்சில் ஈசன் எழுந்தருளுவான் என்ற உண்மை புலப்படுத்தினர்.*

*சீலத்துடன் செய்தொழில் மேன்மையும் வேண்டும் என்பது சான்றோர் கருத்து. உலக வாழ்வில் உடலிருக்கும் வரை செய்யும் தொழிலைத் தெய்வமாக மதிக்க வேண்டும் என்பது இறைவன் கட்டளை. கர்மத்தை யோகமாக்கிடும் வித்தை கைவரபெற்றால் பக்தி விளையும்.*

*எனவே சம்பந்த பெருமான்,*
*"தொழிலால் மிகு தொண்டர்கள் தோத்திரம் சொல்ல*
*எழிலார் வரையால் அன்று அரக்கனைச் செற்ற*
*கழலான் உறையும் இடம் கண்டல்கள் மிண்டிப்*
*பொழிலால் மலிபூம் புகலி நகர்தானே"*

*என்று பாடுகின்றார். தத்தம் தொழிலில் மேம்பாடு அடைந்தோரே சிறந்த இறையடியார்கள்.*
*<u>வாழ்வின் குறிக்கோள்:</u> மண்ணில் நல்லவண்ணம் வாழும் கலை அறிந்தவர் விண்ணில் நல்ல வண்ணம் வாழும் பிறவாத பேரின்பம் காண்பர். அதற்கு அப்பர்பெருமான் அருமையான வழியினைக் காட்டுகின்றார்.*

*"மெய்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்மையாம் களையை வாங்கி பொறை எனும் நீரைப் பாய்ச்சி*
*தம்மையே நோக்கிக்கண்டு - தகவெனும் வேலியிட்டு*

*செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையுமன்றே.”*

*உண்மை என்னும் உழவினை உள்ளமாகிய வயலில் உழுதிடுக; பக்தி என்னும் விதையை விதைக்க; உடன் முளைக்கும் பொய் முதலான களைகளை உடனுக்குடன் அகற்றுக, பொறுமை என்னும் தண்ணீரை ஓயாது பாய்ச்சுக; ஒவ்வொரு கணமும் தம்மையே ஞானநெறியில் ஆய்ந்து காண்க; அதற்காகத் தகுதி என்னும் வேலியினை இடுக; பின்னர் முழுமையான செம்மைப் பண்பில் நிற்க; அப்பொழுது அகத்தில் சிவப் பேறு விளையும். பேரின்பம் தித்திக்கும். திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானும் உலகமக்களையெல்லாம் அழைத்து மாந்த வாழ்வின் குறிக்கோள் சீவன் சிவமயமாதல் என்பதை வற்புறுத்தினார். இவ்வாறு சமுதாயத்தின் உறுப்புகளாகிய மக்கள் யாவரும் ஆண், பெண் பேதமற்று இறைநெறி நின்று உய்யும் வகை உணர்ந்து பேரின்ப நிலை காண முடியும் என்பதை வாழ்வின் குறிக்கோளாக நம் சமயச் சான்றோர்கள் இனிதின் விளக்கிச் சென்றுள்ளனர்.*

**முடிவுரை:**

*“ஆருயிர்கட்கு எல்லாம் அன்பு செயல் வேண்டும்” – “எவ்வுயிரும் தம் உயிர் போல் எண்ணி” “பசிப்பிணி போக்கி” வாழ்ந்திட வேண்டும் என்பார் வள்ளல் பெருமான். அப்போது அம்மையும், அப்பனுமாய் அடியாருக்கு வழிகாட்டும் பரம்பொருள் ஞான ஒளிவிளக்காக நெஞ்சத்தில் இருந்து பக்திநெறியை வளர்க்கும். பக்தி நெறி பழ வினைகளைப் பொடியாக்கும். வினை நீக்கம், சாவாத, மூவாத, பிறவாத, பேரின்ப நிலைக்கு வழிகாட்டும். எனவே நடமாடும் கோயில்களாகிய மனிதகுலத்தை - சமூகத்தை - தெய்வநிலைக்கு உயர்த்தவே நமது அருளார்கள் வேண்டிப்பாடிய பக்தி இலக்கியங்கள்யாவும் நமக்கு அமுத மழையாய் கிடைத்துள்ளன. அவர்கள் காட்டிய நல்வழிச்சென்று நாம் சிவகதி அடைய வேண்டும் என்பதே அவர்களின் சமூகச் சிந்தனையும் ஆகும்.*

*References:*

*Nadarajan, P. (2018). Spiritual Practices in Tamil Culture: A Pathway to Community Well-being. Chennai: Tamil Publisher.*
*Rajasekar, S. (2021). Voices of the Marginalized in Tamil Spiritualism. Journal of Tamil Studies, 12(4), 250-260.*

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.